**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை - 600 025.**

**இளநிலைத் தமிழியல் - பட்டம் (B.A. TAMILOLOGY - Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் - திசம்பர் 2017**

**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு - 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கலிப்பாவின் உறுப்புகள் எவை?
2. சமூக நாவல்களில் இடம்பெற வேண்டியவை எவை?
3. சிறுகதை படைப்பிலக்கியத்திற்கு தேவையான மூன்று அடிப்படைகள் யாவை?
4. பழந்தமிழ் உரைநடைக்கு உரமிட்டவை எவை?
5. அந்தாதி நூல்களின் யாப்பு எது?
6. பால்முறை பகுப்பு என்றால் என்ன?
7. வரதட்சணை வாங்குவது குறித்து காந்தியடிகள் கருத்து யாது?
8. பிராமிக் கல்வெட்டின் மற்றொரு பெயர் என்ன?
9. பாரதத்தின் பொருண்மை யாது?
10. ஆசிரியரே கதை கூறல் என்றால் என்ன?
11. சிறுகதை மன்னன் யார்? அவர் எக்காலத்தைச் சார்ந்தவர்?
12. மகேந்திரவர்மனின் நாடகங்களில் ஒன்றைக் குறிப்பிடுக.
13. சுத்தானந்த பாரதியின் படைப்புகளுள் ஒன்றைக் குறிப்பிடுக.
14. நாவலில் உரைநடை வகைகளை எழுதுக.
15. அகிலனின் கடைசி வரை கதையின் கருப்பொருள் யாது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. அரபு கவிதையில் கருத்து உணர்ச்சி கற்பனை குறித்து எழுதுக.
2. உலக நாவல்கள் குறித்து எழுதுக.
3. சிறுகதை உத்திகள் விளக்குக.
4. இந்திய நாடக ஆசியரியர்கள் குறித்து விளக்குக.
5. மரபுக்கவிதையில் உவமை, உருவகம், புதுக்கவிதையில் படிமம் குறித்து எழுதுக.
6. நாவல் உத்தியில் பாத்திர அறிமுகம் குறித்து எழுதுக.
7. உலக வாழ்வில் தத்துவ நெறிகள் குறித்து எழுதுக.
8. உரைநடையின் வகைகள் குறித்து எழுதுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) யாப்பு அடிப்படைகள் விதிகளில் எழுத்து, அசை, சீர், தளை, தொடை குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) சமூக நாவல்களில் பெண்ணிய நாவல்கள் குறித்து விளக்குக.

2. (அ) இறையன்புவின் சிறுகதைகளில் வாழ்க்கை நெறி குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) பத்தொன்பதாம் நூற்றாண்டு உரைநடை ஆசிரியர்கள் குறித்து விவரிக்க.

3. (அ) தமிழக நாடகங்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாவல்களை ஆய்வாளர்கள் எங்ஙனம் வகைப்படுத்துகின்றனர்? விவரிக்க.

***